# முதன்மை மாவட்ட உரிமையியல் நீதிமன்றம், கடலூர்

## O.S.No. 121 of 2019

பெயர் : திரு. புகழ்பாரி
தந்தை பெயர் : திரு. லட்சாதிபதி
பி.வா.த.சா : 1

1969ம் ஆண்டு 14வது சட்டத்தின் படி 12வது பிரிவின் கீழ் 24.01.2026 அன்று **திரு. M. ராஜகுமரேசன், B.Com., L.L.B.,** முதன்மை மாவட்ட உரிமையியல் நீதிபதி, கடலூர் அவர்களால் சத்தியப் பிரமாணம் செய்விக்கப்பட்டது.

பி.வா.த.சா. 1 அழைக்கப்பட்டு வாதி தரப்பில் குறுக்கு விசாரணை செய்யப்பட்டார்.

வாதித் தரப்பில் குறுக்கு விசாரணை.

இந்த வழக்கை யார் தாக்கல் செய்துள்ளார்கள் என்றால் பாரதி என்பவர் தாக்கல் செய்துள்ளார். வழக்கு சொத்து வாதியின் பாட்டிக்கு பாத்தியப்பட்டது என்று இந்த வழக்கை தாக்கல் செய்துள்ளார். வாதியின் பாட்டி தற்போது உயிருடன் இல்லை. வாதியின் பாட்டி பெயர் உண்ணாமலை அம்மாள் ஆகும். வழக்கு சொத்து தூக்கனாம்பாக்கம் பஞ்சாயத்து, ராசாபாளையம் கிராம்தில் உள்ளது. வழக்கு சொத்தின் பழைய சர்வே நெம்பர்.16/8 ஆகும். பின்னர் அதன் சர்வே எண்.33/9C என மாறுதலுக்கு உட்பட்டு தற்போது 53/9C2 என உள்ளது. வழக்கு சொத்தின் மொத்த விஸ்தீரணம் 3 செண்டு ஆகும்.

2. வழக்கு சொத்தில் முன்னர் தண்ணீர் தொட்டி ஊர் மக்களுக்கு தண்ணீர் விநியோகம் செய்வதற்காக கட்டப்பட்டிருந்தது. 2017-2018 ஆம் ஆண்டு அது பழுதாகிவிட்டது. தற்போது ஆழ்துளை கிணறு உள்ளது அதன் மூலம் தண்ணீர் விநியோகம் செய்யப்படுகிறது. ஆழ்துளை கிணறு 5 X 5 சதுரடியில் உள்ளது.

3. நான் கோவில் சார்பாக வழக்கை நடத்தி வருகிறேன். வழக்கு சொத்து கோவிலுக்கு அல்லது நான் சார்ந்திருக்கும் சங்கத்திற்கோ பாத்தியம் கிடையாது என்றால் சரிதான்.

(வழக்கறிஞர் வேண்டுகோளுக்கிணங்க குறுக்கு விசாரணை ஒத்திவைக்கப்படுகிறது)